## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No. 69/2023

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. 1 |
| பெயர் | .. மோகன் |
| தகப்பனார் / கணவர் | .. சண்முகம் |
| வயது | .. 54 |
| தொழில் | .. பட்டுத்தறி |
| கிராமம் | .. செய்யாறு |
| தாலுக்கா | .. செய்யாறு |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 29.07.2013 ம் தேதியிட்ட தானச்செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.1, 29.07.2013 ம் தேதியிட்ட பாகபாத்திய அக்குவிடுதலைப் பத்திரத்தின் (ஆவண எண்.6009/2013) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2, 11.12.2022 ம் தேதியிட்ட பட்டா எண்.465-ன் கணினி பட்டா நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– N. சுரேஷ்
**முதன்மை சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**